# வேதநாயகம்பிள்ளையின் சர்வசமய சமரசக் கீர்த்தனைகள் – ஓர்நோக்கு

*செல்வி ப. கணேசகம்பர்*
சிரேஸ்ட விரிவுரையாளர்
தலைவர்/இசைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்

மலர்: 10
சிறப்பிதழ்: 1
மாதம்: ஜூலை
வருடம்: 2022
**P-ISSN: 2321-788X**
**E-ISSN: 2582-0397**
**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5024

## முன்னுரை

வேதநாயகம்பிள்ளை தமிழில் இசைப்பாடல்கள் இல்லாத குறையைப் போக்குவதற்காக இசைப்பாடல்களை எழுதினார். இவை இசைத் தமிழுக்கு அருமையான இலக்கியங்களாக விளங்கின. சமயங்களுள் வேறுபாடில்லை என்பதனை உணர்ந்த வேதநாயகம் பிள்ளையவர்கள் மக்கள் அனைவரும் ஒருசேர இறைவனைப் பாடி மகிழ்வதற்காக பல கீர்த்தனைகள் அவ்வப்போது வெளியிட்டார். அவ்வாறு எழுதப்பட்ட கீர்த்தனைகளை “சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்” என்னும் பெயரில் 1878ல் 192 இசைப்பாடல்களாக வெளியிடப்பட்டது. இக்கீர்த்தனைகள் பெயருக் கேற்றவாறு மதங்களுக்குப் பொது வானதாகவும் சமயம் சாராது எந்தக் கடவுளையும் குறிப்பால் சுட்டாது அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையிலே தனித்துவமான பண்புகளைக் கொண்டதாக விளங்குகிறது.

வேதநாயகம்பிள்ளை அவர்கள் திருச்சிராப்பள்ளியை அடுத்துள்ள குளத்தூரில் 1826ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதலாம் நாள் சவரிமுத்துப்பிள்ளைக்கும் ஆரோக்கிய மாரியம்மாளுக்கும் புதல்வனாகத் தோன்றினார். வேதநாயகம்பிள்ளை அவர்கள் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர். மும்மூர்த்திகள் காலத்தில் சமஸ்கிருத மொழியும் தெலுங்கு மொழியும் இசைப்பாடல்களில் செல்வாக்குப் பெற்றிருந்தன. வேதநாயகம்பிள்ளை காலத்தில் கோபாலகிருஷ்ண பாரதியாரும் இசை மேதையாக விளங்கினார். வேதநாயகம்பிள்ளை செய்த மனிதாபிமான செயல்களைக் கண்ணுற்ற கோபால கிருஷ்ண பாரதியார் அவரைப் புகழ்ந்து ஓர் கீர்த்தனையில் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவருடைய கீர்த்தனைகள் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அமைப்பிலேயே அமைந்துள்ளன. இது தவிர அனைத்துக் கீர்த்தனைகளும் மூன்று சரணங்களுக்கு குறைவுபடாமல் பல சரணங்கள் சேர்ந்து காணப்படுகிறது. வேதநாயகம் பிள்ளை தனக்கு முன் வாழ்ந்த வாக்கேயகாரர்கள் பற்றிநன்கு அறிந்திருந்தார். முத்துஸ்வாமி தீட்சதரின் க்ருதிகளில் அமைந்துள்ளது போல் மத்திமகால சாகித்தியம் இவரது கீர்த்தனைகளிலும் காணப்படுகிறது.

சாவேரி இராகத்திலமைந்த "ஏதோ இன்னம் வாதோ" எனத் தொடங்கும் கீர்த்தனையின் இறுதிப்பகுதியில் மத்திம கால சாகித்தியத்தின் அமைப்பினைக் காண முடிகிறது.

**ஐம்புலவேடர் வேட்டை ஆடித்திரியும் காட்டை**
**வேம்பாகப் பேய்வாழ் வீட்டை விரும்பிய துன்பமூட்டை**
**மேவி மனம் அயர்ந்தேன் - நிலையில்லாம்**
**புவின் அகம் வியந்தேன் - அனுதினம்**
**பாவழி நலந்தே - இனிமேல் வரும்**
**சாவை எண்ணிப் பயந்தேன்.**

என்று மத்திமகால சாகித்தியத்தைக் காணமுடிகிறது. இதேபோல் மத்திமகால சாகித்தியங்கள் அமைந்த பிற கீர்த்தனைகள்

**இராகம்தாளம்**

எனை ஆதரிப்பாயே - கேதாரகௌளை - ஆதி
உன்னிடத்தில் சொல்லாமல் - அசாவேரி -ஆதி
வினையே எனைமேவாதருளே - பரசு - திரிபுடை
இந்தப்பிழைகளெல்லாம் பொறுத்தருள்வாய் - பைரவி - ஆதி

மேலும் இவரது கீர்த்தனைகள் சமூகம் பற்றிய கருப்பொருளைக் கொண்டு பாடப்பட்டவை. பெரிய துரைமாருக்கும் அவர்களுக்கு கீழே பணிபுரியும் துரைமாருக்கும் இடையிலான வேறுபாட்டினை ஒருபாடலில் வடித்திருக்கிறார். இதற்கு எடுத்துக்காட்டாக

**அந்தப்பெரிய துரைக்கு இந்த துரைகள்**
**சரியா மூடமனமே - சௌராட்சிரம் - ஆதி**

சைவசமயப்பாடல்களுள் திருமூலரின் திருமந்திரம் சிறப்பிடம் பெறுகிறது. அவ்வாறே வேதநாயகம்பிள்ளை அவர்களின் பாடல்களிலும் திருமந்திரத்தின் சாயலைக் காணலாம்.

எடுத்துக்காட்டு:-

எனை ஆதரிப்பாயே - கேதாரகௌளை - ஆதி

இப்பாடலில்

சிஷ்டர் சமுதாயனே
துஷ்டர் அபாயனே
இஷ்டர்கள் சகாயனே
அஷ்டகுண நேயனே
என்ற அபுகளும்
அடிலானன் வினைவசம்
ஆயினேன் இது நிசம்
படியிற் கருணா ரசம்
பாலித்தருள் கவசம்

என்ற வரிகளை நோக்கலாம்.

மேலும் சொற்பதங்களை அடுக்கு மொழிகளில் கையாள்வது இவரது சிறப்பாகும். அந்த வகையில் கோபுச்சஜதி (சொற்கள் குறைந்து செல்லல்) போன்ற அமைப்பினை இவரது பாடல்களில் காணலாம்.

எடுத்துக்காட்டாக :-

கடைக்கண்ணால் எனைப் பாராய் - பந்துவராளி - ரூபகம்

எனும் கீர்த்தனையில்

கோலா கலா - முலா அனு - கடலா - குண சீலா நிதம்

எனவும்

வாசா - புவ - நேசா - மற - நாத - பிற - காசா - ஒரு
பாலா - அணு - கடலா - ஒரு - மேலா - முதல் - தூலா

ஏன்ற பாடல் வரிகளைக் குறிப்பிடலாம்.

வேதநாயகம் பிள்ளையவர்கள் தனது கீர்த்தனைகளில் மணிப்பிரபாள நடையினைக் கையாண்டு இருப்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

எடுத்துக்காட்டு :-

நானே உனை நம்பினேன் - சுத்தசாவேரி - ஆதி

இதில்,

விபுதகண விநிதிகா - நாளும்
வேதநாயகன் அந்த கரணா
சுபமங்கள தரணா - சுயநல குலா தரணா
தூயா - கனநேயா - புவித்தாயான
சகாயர் நிதம்

முடிவில் வரும்.

வேதநாயகம் பிள்ளையவர்கள் தமது பாடல்களில் பழமொழிகளைக் கையாண்டுள்ளார்.

எடுத்துக்காட்டாக :-

செவிடன் காதில் ஊதிய சங்கு
பல்லி கழுத்தில் விழுந்து சாகுதல் போல
கப்பல் இல்லாமல் கரை கடக்க வெண்ணாதே
இருதலைக் கொள்ளி எறும்பு போல்

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மகளீருக்குரிய பண்புகள் அனைத்ததிற்குமுரிய இலக்கியமாக விளங்கும் சுகுண சுந்தரி என்ற புதுக்கவிதை, சித்தாந்த சங்கிரகம் என்னும் சட்ட நூல், பக்தி நூல்களாகிய திருவருள் மாலை, திருவருள் அந்தாதி, தேவமாதா அந்தாதி, பெரிய நாயகி அம்மன் பதிகம், தேவஸ்தோத்திர மாலை ஆகியவை இவரது படைப்புக்கள் ஆகும்.

### சர்வசமயசமரசக் கீர்த்தனைகளின் இசையமைப்பு

இவரது கீர்த்தனைகள் சங்கராபரணம், தோடி, கல்யாணி, சரசாங்கி, கரகரப்பிரியா போன்ற தாய்ராகங்களிலும் காம்போதி, சாமா, அசாவேரி, சகாணா, சுருட்டி, கம்சத்வனி, சைந்தவி, நாதநாமக்கிரியா, பரசு, பேகட, பெகாக், பிலகரி, வஸந்தா போன்ற சேய் இராகங்களிலும் கற்கட, அபுர்வம், பலஹம்ச, வஸந்தா, சாலகனபைாவி போன்ற அபுர்வ இராகங்களிலும் ஹிந்துஸ்தான் காபி, தர்பார், ஜாவந்தி, மாஞ்சி, தேஸ், முகாரி, யமுனா கல்யாணி, ஹமீர் கல்யாணி, போன்ற இராகங்களிலும் அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

சர்வசமயசமரசக் கீர்த்தனைகளில் சில இசை அரங்குகளில் இசைக் கலைஞர்களால் பாடப்பட்டு வருகின்றன.

எடுத்துக்காட்டாக,

**"கருணா லய நிதியே."**
**"தயை புரிய இன்னும் தாமதமா."**
**"நல்ல நல்ல நாள்"**
**"கருணா சாகரா.."**
**"புண்ணியம் போல் பாவம்.."**
**"நினைப்பது எப்போ நெஞ்சே"**
**"என்ன வந்தாலும் மனமே"**
**"ஓஹோ காலமே"**

ஆகிய கீர்த்தனைகளைக் குறிப்பிடலாம்.

### தாளங்கள்

ஆதி - ரூபகம் - அடதாளம் - சாபுதாளம் - திஸ்ரமட்டியம் - திரிபுடை . ஏகம் - போன்ற தாளங்களையும் கையாண்டுள்ளார்.

### முடிவுரை

இவர் தனது முத்திரையாக வேதநாயகன் என்றே பதிந்துள்ளார்.

### உதாரணம்

**"வேதநாயகன் தொழும் - ஈசமனோகரி - ஏகம் விமல சொரூபா"**

என்றும்

**"ஈசனே உனைத் தொழும் தாசன் வேதநாயகன் பாசவலையுறாமல்"**

எனவும் முத்திரை பதித்திருப்பதைக் காணமுடிகிறது.

இவரது கீர்த்தனைகள் சமூகத்தின் சிக்கல்களைக் கருப்பொருளாகக் கொண்டமைந்தவை. பெண்கள்கல்வி, ஆடவர் பண்புகள், பொருளாசை, பஞ்சம், துர்க்குணங்கள், பரிதான கண்டனம், அதிகார துஷ்பிரயோகம் போன்ற சமூகப் பிரச்சனைகள் தமது பாடல்களின் கருப்பொருளாகக் கொண்டிருந்தார்.

**1857** ம் ஆண்டு தரங்கம்பாடியில் நீதிபதியாக விளங்கினார். நீதிநூல் எழுதியவர். சிறந்த மொழி பெயர்ப்பாளர்.

**1889** - யுலை மாதம் **21** ம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**1869** ல் பெண்களுக்குரிய கடமைகளை எடுத்துக்கூறும் "பெண்மதி மாலை" எனும் நூல் வெளியிட்டார்.

**1878** ல் பிறதாபமுதலியார் சரித்திரம் எனும் நூல் வெளியிட்டார்.

(உரை நடை இலக்கியத்துள் முதலிடம் பெறும்)

**1887** ல் சுகுண சுந்தரி எனும் நாவல் வெளியிட்டார்.

### உசாத்துணை நூல்கள்

1. இந்திய இசைக் கருவுலம் - டாக்டர். பக்கிரிசாமி பாரதி கே.ஏ - குசேலர் பதிப்பகம் - சென்னை 2004
2. தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும் பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்க கட்டுரை தொகுப்பு தமிழ்த்துறை கொங்குநாடு கலை அறிவியற் கல்லூரி கோயம்புத்தூர் 2018
3. தென்னக இசையியல் (பி.டி) செல்லத்துரை - வைகறைப் பதிப்பகம் - திண்டுக்கல் 2005